# <u>அறிவித்தல்</u>

A

அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சவாலுக்குற்படுத்தப்பட்ட **"அரச காணி (விசேட ஏற்பாடுகள்)"** எனும் சட்டமூலம் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

அரசியலமைப்பின் 123 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 120 ஆம் உறுப்புரையின் பிரகாரம், குறிப்பிட்ட சட்டமூலம் மாகாண சபைகளின் விடய நிரலுக்கு உட்பட்டதாக இருப்பதால் அரசியலமைப்பின் 154எ(3) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படுவதற்கு முன்னர் மாகாண சபைகளின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக அதிமேதகு சனாதிபதியினால் ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டாலன்றி அது சட்டமாக ஆக்கப்பட முடியாது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அரசியலமைப்பின் 154எ(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடப்பட்டிருப்பதால், நீதிமன்றம் இத்தருணத்தில் இச் சட்டமூலம் தொடர்பில் எழுப்பியுள்ள ஏனைய சட்டக் காரணங்களினால் தீர்பொன்றை வழங்குதில்லை என உயர் நீதிமன்றம் மேலும் கருத்துரைத்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.